## மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றம், கோபிசெட்டிபாளையம்

2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10- ம் நாள் திரு.S.இராமச்சந்திரன், B.L., மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச் சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதிசெய்யப்படுகிறது.

O.S. NO. 133/2024

**வா.சா.1**

**திருமதி. செண்பகவள்ளி**

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**குறுக்கு விசாரணை ( பிரதிவாதிகள் தரப்பில்)**

என்ன பரிகாரத்திற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் வழக்கு சொத்தை கிரையம் செய்துகொடுக்கவும், இல்லையென்றால் முன்பணத்தை திருப்பி கொடுக்கவும் கேட்டுள்ளேன். பிரதிவாதிகளை எப்படி எனக்கு தெரியும் என்றால் அவர்கள் உள்ளூரைச் சேர்ந்தவர்கள் தான் சொத்தை விற்பனை செய்ய நடவடிக்கை எடுத்தார்கள். ஒப்பந்த தேதியில் நான் எங்கு குடியிருந்தேன் என்றால் கோபி சீத்தம்மாள் காலனியில் இருந்தேன். பிரதிவாதிகள் கோபி நாயக்கன்காலனியில் குடியிருந்தார்கள். கிரைய ஒப்பந்தத்திற்கு முன்பாக எனக்கும், பிரதிவாதிகளுக்கும் இடையே எந்த வரவும் செலவும் இல்லை என்றால் சரிதான். கிரைய ஒப்பந்தம் எப்போது ஏற்படுத்தப்பட்டது என்றால் 19-07-2016. பிரதிவாதிகளுக்கு சொத்து எப்படி பாத்தியம் என்று தெரிந்துகொண்டேனா என்றால் தெரியும் அவரது தாத்தா உயில் எழுதி வைத்துள்ளார் அதாவது கோவிந்தநாயக்கர் சௌந்தருக்கு உயில் எழுதிவைத்துள்ளார். அசல் உயிலை நான் பார்வையிட்டேனா என்றால் ஆமாம்.

எந்த ஆண்டு அசல் உயிலை பார்வையிட்டேன் என்றால் சரியாக நினைவில்லை. 2016ம் ஆண்டுக்கு முன்பே கோபி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண்.270/2014 என்ற வழக்கினை ராஜேந்திரன், மனோஜ்குமார் ஆகியோர்கள் வாதிகளாக இருந்து என்னை 7ம் பிரதிவாதியாக சேர்த்து ஒரு வழக்கு தாக்கல் செய்தார்கள் என்றால் சரிதான். அந்த வழக்கும், இந்த தாவா சொத்தை பொறுத்து தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி வழக்கானது இந்த வழக்கு ஒப்பந்த தேதிக்கு முன்பாக தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி வழக்கில் எனக்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்தது என்றால் சரிதான். மேற்படி வழக்கின் வாதிகள் யார் என்று தெரிந்துகொண்டேனா என்றால் எனக்கு நேரடியாகத் தெரியாது உயர்நீதிமன்றத்தில் வழங்கப்பட்ட தீர்ப்பின் அடிப்படையில் உறவுமுறையை தெரிந்துகொண்டேன். மேற்படி அ.வ.எண். 270/2014 வாதிகள் திருவேங்கடம் என்பவரது 2வது மனைவியின் குழந்தைகள் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. தாவா சொத்தைபொறுத்து ஏற்கனவே ஒரு வழக்கு நிலுவையில் இருந்துவரும் நிலையில் அதை தெரிந்துகொண்டே எதற்காக ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொண்டேன் என்றால் அதை பற்றி எனக்கு தெரியவில்லை. சொத்தானது வழக்கு பிரச்சனையில் இருந்துவரும்நிலையில் இந்த வழக்கின் பிரதிவாதிகளுக்கு சொத்து வருமா வராதா என்று தெரிந்துகொள்ளாமலேயே இந்த வழக்கின் ஒப்பந்தத்தை நான் பிரதிவாதிகளுடன் ஏற்படுத்திக்கொண்டேன் மேற்படி ஒப்பந்தமானது கிரைய நடவடிக்கைக்காக ஏற்படுத்தப்பட்டதல்ல என்றால் சரியல்ல. உயர்நீதிமன்ற தீர்ப்பின்படி ராஜேந்திரன் திருவேங்கடத்தின் வாரிசல்ல என்று தீர்ப்பளிக்கப்பட்டது.

எந்த ஆண்டு சென்னை உயர்நீதிமன்றம் அவ்வாறு தீர்ப்பளித்தது என்றால் வருடம் எனக்கு நினைவில்லை. அ.வ.எண். 270/2014 வழக்கில் எப்போது சமரச தீர்ப்பு ஏற்பட்டது என்றால் நான் வழக்கறிஞர் வைத்து ஆஜராகவில்லை எனவே வருடம் தெரியாது. பிரதிவாதிகள் என்னிடம் கடன் கேட்டார்கள் என்றும், மேற்படி கடன் தொகைக்கு சொத்தை பொறுத்து ஒப்பந்தம் எழுதிக்கொடுத்தால் தான் கடன் கொடுப்பேன் என்று சொன்னேன் அதனால் தான் ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது என்றால் சரியல்ல. நான் வீட்டில் இருந்து வருகிறேன் வேலைக்கு செல்லவில்லை. எனக்கு தனிப்பட்ட முறையில் வருமானம் எதுவுமில்லை. ஒப்பந்தப்படி எவ்வளவு தொகைக்கு ஒப்பந்தம் எழுதப்பட்டது என்றால் ரூ.30 லட்சம். எவ்வளவு தொகை முன்பணமாக கொடுக்கப்பட்டதாக ஒப்பந்தத்தில் உள்ளது என்றால் ரூ.15 லட்சம். என் 2 குழந்தைகளுக்கு 2016 ல் என்ன வயது என்றால் மூத்த மகனுக்கு 22, இளைய மகனுக்கு 20. மேற்படி இருவரும் கல்லூரியில் படித்துவந்தார்கள் என்றால் சரிதான். எனக்கு வருமானம் எதுவும் இல்லை என்று கூறும்நிலையில் ரூ.15 லட்சம் எந்த வகையில் வந்தது என்றால் விவசாய வருமானம் வந்தது நகைகளை அடகு வைத்து கொடுத்தேன். எனக்கு விவசாய பூமி இருந்தது அதிலிருந்து வருமானம் வந்தது என்று காண்பிக்க ஆவணம் தாக்கல் செய்ய இயலுமா என்றால் இயலாது. நகை அடகு வைத்து பணம் பெற்றுக்கொண்டேன் என்று காண்பிக்க ஆவணம் தாக்கல் செய்ய இயலுமா என்றால் பேங்கில் தான் அடமானம் வைத்தேன். ஒப்பந்தத்தில் கண்டுள்ள ஒரு சொத்து கோபி சீதாகல்யாண மண்டபத்தை ஒட்டி மெயின்ரோட்டில் உள்ளது என்றால் சரிதான். அது விவசாய பூமி அல்ல. அது 11.1/2 சென்ட். 2016 ம் ஆண்டு மேற்படி நிலம் 1 சென்ட்டின் மதிப்பு

ரூ.10 லட்சம் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மற்றொரு சொத்து டி.என்.பாளையத்தில் 1 ஏக்கர் 20 சென்ட் உள்ளது அதன் மதிப்பு தெரியாது. ஒப்பந்த்தை கோபி சார்பதிவாளர் அலுவலகத்தில்பதிவு செய்யாமல் டி.என்.பாளையம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவுசெய்ததற்கு காரணம் என்னவென்றால் நான் வீட்டில்இருந்து வந்ததால் எனக்கு அலுவலக நடவடிக்கைகள் தெரியாது அனைத்து நடவடிக்கைகளும் என் சகோதரர் விஸ்வேஸ்வரன் தான் செய்து வந்தார் அவர் உயிருடன் உள்ளார். ஒப்பந்தத்தில் 6 மாதங்கள் காலக்கெடு நிர்ணயிக்கப்பட்டது என்றால் சரிதான். 6 மாத காலங்கள் 18-01-2017 ல் முடிவடைந்தது என்றால் சரிதான். 18-01-2017 லிருந்து 3 ஆண்டுகள் 17-01-2020 ல் முடிவடைகிறது என்றால் சரிதான். மேற்படி 3 ஆண்டுகளுக்குள் பிரதிவாதிகளுக்கு ஒப்பந்தப்படி கிரையம் எழுதிக்கொடுக்கவேண்டி அறிவிப்பு கொடுக்கவில்லை என்றால் சரிதான். 21-07-2023 ல்தான் அறிவிப்பு கொடுத்தேன் என்றால் சரிதான். ஒப்பந்த தேதியிலிருந்து 6 ஆண்டுகள் கழித்துதான் அறிவிப்பு அனுப்பியுள்ளேன் என்றால் சரிதான். அறிவிப்புகரு பின்னிட்டு 05-12-2024 ல் தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். ஏன் உரிய காலத்தில் அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் நான் பலமுறை நேரில் சென்று கிரையம் எழுதிக்கொடுக்க கேட்டேன் ஆனால் அவர்கள் காலதாமதம் செய்து வந்தார்கள் ஒரு காலகட்டத்தில் நம்பிக்கை இல்லை என்பதால் அறிவிப்பு கொடுத்தேன். எந்தெந்த தேதியில் அவ்வாறு பிரதிவாதிகளை கேட்டேன்

என்று அறிவிப்பிலும், வழக்குரையிலும் சொல்லவில்லை என்றால் சரிதான்.

**வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**